MUNICIPAL ADMINIST
26 DEC 2011
CHENNAI

## சுருக்கம்

தூத்துக்குடி மாநகராட்சி – "பக்கிள் ஓடை" சீரமைப்பு– ரூ.7,00,00,000/– கோடி செலவில் நான்காம் கட்டப் பணிகள் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை

அரசாணை (2ப) எண்.121 நாள். 23.12.2011

திருவள்ளுவராண்டு, 2042
மார்கழி திங்கள்07–ம் நாள்

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (இருபதாண்டு) எண்.110, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 01.08.08
2. அரசாணை (இருபதாண்டு) எண்.12, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 5.3.2010
3. நகராட்சி நிர்வாக ஆணையர் செயல்முறை ஆணை எண்.51913/பி3/2010, நாள் 08.11.2010
4. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித ந.க.எண்.38686/2011/நி1, நாள்.18.10.2011
5. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித ந.க.எண்.38686/2011/நி1, நாள். 15.11.2011

– – – – –

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தூத்துக்குடி நகராட்சியில் (தற்போது மாநகராட்சி) அமைந்துள்ள பக்கிள் ஓடையை மேம்படுத்தும் பணியினை மூன்று கட்டங்களாக (three phases) செயல்படுத்த ஒப்புதல் அளித்தும், இத்திட்டத்தின் முதல் கட்டப் பணியினை மட்டும் ரூ.698.30 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளித்தும் அரசு ஆணையிட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ரூ.7.50 கோடி செலவில் இரண்டாவது கட்ட சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் செயல்முறை ஆணையில், ரூ.4.30 கோடி செலவில் மூன்றாவது கட்ட சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது.

4. இந்நிலையில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 2011–12 ஆம் ஆண்டிற்கான மான்யக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள் பக்கிள்

ஓடை நான்காம் கட்ட சீரமைப்புப் பணிகள் ரூ.6/–கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என அறிவித்திருந்தார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையர், மேலே நான்காவது மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதங்களில், மேற்கண்ட பக்கிள் ஓடை சீரமைப்பு பணி மாநகராட்சி பகுதியில் உள்ள மொத்த நீளமான 7.28 கி.மீ நீளத்தில், 5.30 கி.மீ நீளம் போக, மீதமுள்ள 1.98 கி.மீ நீளத்திற்கு முழுமையாக சீரமைப்பு பணி மேற்கொள்ள, மாமன்றம் தனது தீர்மானம் எண்.417, நாள்.30.08.2011–இல் ரூ.7.00 கோடிக்கு அனுமதி அளித்துள்ளது என்றும், அதில் ரூ.6.00 கோடி அரசு மானியமாகவும், மீதமுள்ள ரூ.1.00 கோடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் அனுமதித்துள்ளது எனவும், தெரிவித்துள்ளார்.

6. மேலும் நான்காம் கட்ட சீரமைப்புப் பணிகளை ரூ.7,00,00,000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்குமாறும், அதில் ரூ.6,00,00,000/– கட்டமைப்பு ஈடுசெய்யும் நிதியிலிருந்து (Infrastructure Gap Filling Fund) பெற்றும், மீதமுள்ள ரூ.1.00 கோடியை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

7. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையையேற்று, தூத்துக்குடி மாநகராட்சியில் "பக்கிள் ஓடை" சீரமைக்கும் நான்காம் கட்டப் பணிகளை நடப்பு நிதி ஆண்டில் ரூ.7,00,00,000/– (ரூபாய் ஏழு கோடி மட்டும்) செலவில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கியும், மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான ஈடுசெய்யும் நிதியிலிருந்து ( Infrastructure Gap Filling Fund) ரூ.6,00,00,000/– (ரூபாய் ஆறு கோடி மட்டும்) பெற்றும், கூடுதலாக தேவைப்படும் தொகையான ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) தூத்துக்குடி மாநகராட்சி தனது பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் 23.12.2011 நாளிட்ட அ.சா.கு.எண்.259/நிதி (நநிமகுவ)/ 2011–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி.

நகல்
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நிதி (நநிமகுவ) துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2/வ.செ) துறை, சென்னை–9.
இ.கோ/உ.நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

23/12/11
பிரிவு அலுவலர்.